TM CS Karufamily Sept8 revised.qxp 8/31/2010 1:28 PM Page 2



# கு'பேர' ராஜ்ஜியம்

**டிவி சேனல் முதல் சினிமா தயாரிப்பு வரை ஒட்டுமொத்த மீடியா உலகமும் கருணாநிதி குடும்பத்தின் ஆளுகைக்குள் இருப்பதாக குற்றம்சாட்டப்படுகிறது. இது நல்லதுதானா?**

லக்ஷ்மி சுப்ரமணியன்

தமிழக முதல்வர் மு.கருணாநிதி குடும்பத்திலிருந்து தமிழ் சினிமாவில் காலடி பதிக்கும் மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்தவர் அருள்நிதி. அவர் நாயகனாக அறிமுகமாகியிருக்கும் படத்திற்கு இதைவிட வேறு பொருத்தமான தலைப்பை வைத்திருக்க முடியாது: *வம்சம்*. கருணாநிதியின் மூன்றாவது மகன் மு.க. தமிழரசுவின் மகனான அருள்நிதி, கலாநிதி மாறன், உதயநிதி ஸ்டாலின், துரை தயாநிதி ஆகியோரின் வழியில் திரை உலகில் நுழைந்திருப்பது, கருணாநிதி குடும்பம் வம்சாவழியாக தமிழ் சினிமாவில் செலுத்தி வரும் தாக்கத்தின் மற்றுமொரு அடையாளமாக மாறியிருக்கிறது. அந்தப் படத்தின் ஒலிப்பேழை வெளியீட்டு விழாவில் தாத்தா தன் பேரனுக்கு இப்படி அறிவுரை கூறினார்: "நீ விஜய் போல், சூர்யாவைப் போல் எதிர்காலத்தில் வெற்றி பெற வேண்டும். ஆனால் அது உன் குடும்பப் பின்புலத்தால் அல்லாமல் அவர்களைப் போலவே கடின உழைப்பால் வெற்றி பெற வேண்டும்." தன் மூத்த மகன் மு.க.முத்துவை எம்.ஜி.ஆருக்கு எதிராக நடிப்புக் களத்தில் இறக்கி விட்டபோது ஏற்பட்ட தோல்வி அவர் மனதில் நிழலாடியிருக்க வேண்டும். 1970களில் அவர் முத்துவை நடிகராக களம் இறக்கியது வெற்றி பெறவில்லை. அதோடு, நெருங்கிய நண்பராக இருந்த எம்.ஜி. ஆரோடு ஏற்பட்ட பிணக்கு அதிகரிக்கவும் கருணாநிதியை எதிர்க்கட்சி வரிசையில் தொடர்ந்து அமர வைக்கும் மிக மோசமான எதிரி உருவாகவும் அதுவே காரணமாக அமைந்தது என்று கூறப்படுவது உண்டு. ஆனால் இன்று அருள்நிதி விஷயத்தில் அவ்வளவு மோசமான தோல்வி ஏதும் நிகழவாய்ப்பில்லை. ஏனெனில் 1970களில் இருந்த நிலையும் 2010ல் இருக்கும் நிலையும் ஒன்றல்ல. இன்று, தமிழ் மீடியாவில் கருணாநிதி குடும்பத்தின் பல்வேறு உறுப்பினர்கள் வைத்து இருக்கும் இரும்புப் பிடி அசைக்க முடியாதது.

ஏற்கனவே சாட்டிலைட் தொலைக்காட்சித் துறையில் கருணாநிதி குடும்பத்தின் கொடி பறக்கிறது. பேரன்கள் கலாநிதி மாறனும் தயாநிதி மாறனும் நடத்தும் சன் நெட்வொர்க்கில் 95 மில்லியன் குடும்பங்களை எட்டும் 20 சேனல்கள் உள்ளன. வெளிநாடு வாழ் தென்னிந்தியர்களை அதிகம் கொண்ட அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, தென்னாப்ரிக்கா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற 27 நாடுகளையும் அவர்களின் ஒளிபரப்பு எட்டுகிறது. 45 எஃப்.எம் வானொலி நிலையங்களை வைத்திருக்கிறார்கள். கூட்டாக 1.2 மில்லியன் விற்பனை கொண்ட 2 நாளிதழ்கள். பருவ இதழ்கள் நான்கு. 5.5 மில்லியன் சந்தாதாரர்களை எட்டும் சன் டைரக்ட் டி.டி.எச் சேவை. கேபிள் சந்தையில் மூன்றில் இரண்டு பங்கை கையில் வைத்திருக்கும், ரூ.90 கோடி பணம் புரளும் சுமங்கலி கேபிள் விஷன் என்ற கிளை நிறுவனம். இவ்வளவு நிறுவனங்களோடு 2007 முதல் சினிமா தயாரிப்பு மற்றும் விநியோகத் தொழிலிலும் இறங்கியிருக்கிறது ரூ.1,000 கோடி மதிப்புள்ள சன் நெட்வொர்க். இதுவரை ஒரு டஜன் படங்களை வெளியிட்டுள்ள மாறன் சகோதரர்களின் சன் பிக்சர்ஸ் இப்போது ரஜினி, ஐஸ்வர்யா ஆகியோர் நடிப்பில் உருவாகியிருக்கும் *எந்திர*னை விரைவில் திரையிடவிருக்கிறது.



ரூ.150 கோடியில் தயாரிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படும் இந்தப் படம் இந்தியாவின் மிக காஸ்ட்லியான தயாரிப்பு எனப்படுகிறது. படத்தை முதலில் தயாரித்த நிறுவனம் பண நெருக்கடியால் அதை கைவிட்ட நிலையில், அப்படத்தின் நாயகன் ரஜினியே கேட்டுக் கொண்டதற்கிணங்க சன் பிக்சர்ஸ் அதை கையில் எடுத்துக்கொண்டது என்று கூறப்படுகிறது. "இந்தப் படத்திற்காக கலாநிதியை சந்தித்தபோது, இதுவரை பார்த்திராத பிரம்மாண்டமான படமாக இதைத் தயார் செய்வோம் என்று கூறினார். எதையும் பெரிதாக, மற்றவர்களைவிட சிறந்ததாக செய்வது அவரின் வழக்கம். அதனால்தான் சினிமா உள்ளிட்ட அனைத்துத் துறைகளைச் சேர்ந்த முக்கியமானவர்கள் அனைவரும் இவர் யார் என்று தெரிந்து கொள்ள ஆர்வமாக இருக்கிறார்கள். இவர்தான் நிஜமாகவே ஒரு பெரிய ஸ்டார்" என்று மலேசியாவில் நடந்த *எந்திரன்* திரைப்பட ஒலிப்பேழை வெளியீட்டு விழாவில் பேசினார் ரஜினிகாந்த். உண்மையில் ரஜினி பேசியது ஒட்டு மொத்த கருணாநிதி குடும்பத்தைப் பற்றியதாகக்கூட இருக்கலாம். ஏனெனில், மகன் கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள் என்று அரசியல், டிவி, சினிமா, ரேடியோ, பத்திரிகைகள், விமான போக்குவரத்துத் துறை மற்றும் பிசினஸ் என சகல தளங்களிலும் கருணாநிதி குடும்பத்தினர் கோலோச்சுகிறார்கள்.

**1970களில் தனது மகன் மு.க.முத்துவை எம்.ஜி.ஆருக்கு எதிராக உருவாக்க நினைத்த கருணாநிதியின் முயற்சி தோற்றிருக்கலாம். ஆனால் இன்று அவரது குடும்பத்துக்கும் சினிமாவுக்குமான உறவு பிரிக்க முடியாதது.**

பென்சில்வேனியாவிலுள்ள யுனிவர்சிட்டி ஆஃப் ஸ்க்ரான்டனில் எம்.பி.ஏ முடித்த கலாநிதி மாறன் தனது குடும்பம் நடத்திய பத்திரிகையின் பொறுப்பை ஏற்பதற்காக 1980களின் மத்தியில் தமிழ்நாட்டுக்குத் திரும்பினார். இருந்தாலும் அவரின் காதல் தொலைக்காட்சியின் மீதுதான் இருந்தது. ஆனால் டிவி துறையில் தூர்தர்ஷன் மட்டுமே அப்போது இருந்தது. 1990களில் தொலைக்காட்சித் துறை தனியாருக்கு திறந்துவிடப்பட்ட போது கலாநிதி மாறனுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. அதன் பிறகு நடந்ததெல்லாம் அனைவருக்கும் தெரிந்தவை. இரு வருடங்களுக்கு முன்பு சன் நெட்வொர்க்கின் ஓர் அங்கமான சன் பிக்

லென்ஸ்



*பொன்னர் சங்கர்* படத் தொடக்க விழாவில் மு. கருணாநிதி, பிரசாந்த், நெப்போலியன்.

TM CS Karufamily Sept8 revised.qxp 8/31/2010 1:28 PM Page 4



## நடப்பது என்ன

# பிடி யார் கையில்?

**தி.மு.கவுக்கு நெருக்கமான குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் திரைப்பட நிறுவனங்கள் திரையரங்குகளை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால்தான் திரைத் துறையில் அவர்கள் வெற்றிக் கொடி நாட்டுவதாக கூறப்படுகிறது.**

சின்னத்திரை வட்டத்தில் ஜாம்பவானாக வலம் வந்துகொண்டிருக்கும் சன் டிவி குழுமம், 2008 செப்டம்பரில் சினிமாத் துறையில் காலடி எடுத்துவைத்தது. அது வரை தொலைக்காட்சிக்கான திரைப்பட உரிமத்தை மட்டும் விலைக்கு வாங்கி வந்த சன் குழுமம், அதற்குப் பின் புதிய திரைப்படங்களின் ஒட்டுமொத்த உரிமையையும் வாங்க ஆரம்பித்தது. கடந்த இரண்டு ஆண்டுகளில் *காதலில் விழுந்தேன்* தொடங்கி *தில்லாலங்கடி* வரை 15 திரைப்படங்களை வெளியிட்டுள்ளது. திரைப்பட தயாரிப்பில் 70வருட பாரம்பரியம் கொண்ட ஏ.வி.எம் நிறுவனம் தான் தயாரித்த *அயன்* படத்தை சன் பிக்சர்ஸுக்கு விற்ற செய்தி எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்தது. தி.மு.க அதிகாரத்தில் இருக்கும் நிலையில் அதற்கு நெருக்கமான குடும்பங்களைச் சேர்ந்த நிறுவனங்களின் படங்கள் தற்போது சக்கை போடு போடுகின்றன. இவர்களின் படங்களுக்கு முன்னணி தியேட்டர்கள் சுலபமாக கிடைப்பதே இதற்கு காரணமாகச் சொல்லப்படுகிறது. அதேநேரத்தில் சிறு, குறு தயாரிப்பாளர்களின் படங்களுக்கு தியேட்டர்கள் கிடைக்காமல் இருப்பதாகவும் கூறப்படுகிறது. தமிழகத்தில் இருக்கும் 1400 திரையரங்குகளில் 90 சதவீதம் மேற்சொன்ன நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இருப்பதாக கூறப்படுகிறது. தினசரி வாடகை அல்லது ஒப்பந்த அடிப்படையில் இது மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகிறது. ஆனால் "திரையரங்குகள் அந்த நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இல்லை. ஆனால் அவர்கள் படங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவது உண்மையே" என்றார் தமிழக திரையரங்க உரிமையாளர்கள் சங்க செயலாளர் திருச்சி எஸ்.ஸ்ரீதர். கடந்த 14 ஆண்டுகளில் 1200க்கும் அதிகமான திரையரங்குகள் மூடுவிழா கண்டுள்ள நிலையில் இருக்கும் தியேட்டர்களை இந்நிறுவனங்கள் கையகப்படுத்துவது பெரும் திண்டாட்டத்தை உருவாக்கியுள்ளது. ***பொன்.மகாலிங்கம்***

சர்ஸ் உதயமானது. இது *காதலில் விழுந்தேன்* என்ற படத்தில் தொடங்கி *திண்டுக்கல் சாரதி, தெனாவெட்டு, அவுட்லாண்டர், படிக்காதவன், தீ, அயன், மாசிலாமணி, நினைத்தாலே இனிக்கும், கண்டேன் காதலை, வேட்டைக்காரன், தீராத விளையாட்டுப் பிள்ளை, சுறா, சிங்கம்* மற்றும் *தில்லாலங்கடி* போன்ற படங்களை வெளியிட்டு தமிழ்த் திரையுலகில் தொடர் பரபரப்புகளை ஏற்படுத்தி வருகிறது. இவ்வளவுக்கும் இதில் பெரும்பாலானவை சுமாரான கதையம்சம் கொண்டவைதான். இருந்தாலும், இந்தத் திரைப்படங்களில் எதுவும் பெரிய இழப்பைச் சந்திக்கவில்லை என்கின்றன திரைத்துறை வட்டாரங்கள். இன்று இந்திய அளவில், அதிலும் தனியார் துறையில் அதிக சம்பளம் ஈட்டும் மூத்த நிர்வாகி கலாநிதி மாறன்தான். அவரது சம்பளம் ரூ. 37 கோடி. இப்படி கால்பதித்த துறைகளில் எல்லாம் வெற்றி பெற்றிருக்கும் சன் நெட்வொர்க், சமீபத்தில் விமானப் போக்குவரத்துத் துறையிலும் நுழைந்திருக்கிறது. ஸ்பைஸ் ஜெட் நிறுவனத்தில் சுமார் 37.7 சதவீத பங்குகளை வாங்கி இருக்கிறது.

பிற்காலத்தில் அரசியலில் தனது பாதையை வகுத்துக் கொண்ட தயாநிதி மாறனின் கதை இதற்கு கொஞ்சமும் குறைந்ததல்ல. ஐ.மு. கூவின் முதலாம், இரண்டாவது ஆட்சிக் காலங்களின் அமைச்சர் அவர். தங்கள் குடும்பத்தின் பத்திரிகையை நிர்வாகம் செய்து வந்த அவர் அரசியலில் முதல் முறையாக தகவல் தொழில்நுட்ப அமைச்சராகவும் இப்போது ஜவுளித் துறை அமைச்சராகவும் திகழ்கிறார். முந்தைய ஐ.மு.கூ ஆட்சியில் ஐ.டி மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சராக சிறப்பாக செயல்பட்ட அவர், இந்தியாவுக்கு குறிப்பாக சென்னைக்கு ஏராளமான முதலீடுகள் வரக்காரணமாக இருந்தார். சன் நெட்வொர்க்கின் பங்குதாரராக இருப்பதாக சொல்லப்படும் அவர் அந்த சமயத்தில் இந்தியாவிலுள்ள அனைத்து தனியார் சேனல்களின் தொலைத்தொடர்பு விவகாரங்களை நடுநிலைமையோடு கவனிக்க வேண்டிய அமைச்சராக இருந்தார். இது அப்போது அரசின் கடமை - தனிப்பட்ட நலன்களுக்கு இடையிலான முரண்பாடு என்று விமர்சிக்கப்பட்டது. இருந்தாலும் அவர் மிகவும் துடிப்பாக செயல்படும் அமைச்சராகவே அறியப்படுகிறார்.

மாறன் சகோதரர்களுக்கு அடுத்ததாக கருணாநிதியின் இன்னொரு பேரனும் மு.க.ஸ்டாலினின் மகனுமான உதயநிதி ஸ்டாலின் மீடியா துறையில் வலது காலை எடுத்து வைத்திருக்கிறார். அவருக்கு சினிமா மீது ஆழ்ந்த காதல் இருந்திருக்கிறது. "திரைக் கதாசிரியர்கள், தயாரிப்பாளர்கள், இயக்குநர்களின் குடும்பத்தில் பிறந்த எனக்கு



இயல்பாகவே இந்தத் துறையின் மீது ஆர்வம் ஏற்பட்டது. சினிமா எனது ரத்தத்திலேயே ஊறியிருக்கிறது" என்கிறார் அவர். இத்தனைக்கும் அவரின் அம்மா துர்கா ஸ்டாலின் உதயநிதி சினிமா தயாரிப்பில் இறங்குவதை விரும்பவில்லை என்று ஒரு பத்திரிகை பேட்டியில் தெரிவித்திருந்தார்.

கோலிவுட்டில் அடுத்து வரவிருக்கும் இரண்டு பிரம்மாண்டமான படங்கள் உதயநிதி ஸ்டாலினின் ரெட் ஜெயண்ட் மூவிஸ் தரப்பிலிருந்துதான் வரவுள்ளன. கமல்ஹாசன் நடிக்கும் *மன்மதன் அம்பு*, ஆர்யா நடிக்கும் *பாஸ் என்கிற பாஸ்கரன்* ஆகியவை பெரும் எதிர்பார்ப்பை கிளப்புகின்றன. 2008ல் தமிழின் நம்பர் ஒன் இளைய நட்சத்திரம் என கருதப்படும் விஜய் நடித்த *குருவி* படத்துடன் தனது சினிமா தயாரிப்பை தொடங்கிய உதயநிதி *மதராசபட்டினம்*, கௌதம் வாசுதேவ் மேனனின் *விண்ணைத் தாண்டி வருவாயா* போன்ற பெரிதும் கவனிக்கப்பட்ட படங்களையும் விநியோகம் செய்தார். "படத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் தனிப்பட்ட ஆர்வம் செலுத்தினார். படத்தை சிறப்பாக விளம்பரப்படுத்தினார்" என்று சொல்கிறார் *மதராசபட்டினத்*தின் இயக்குனர் விஜய். பொதுவாக அரசியலில் மு.க.ஸ்டாலினுக்கு எப்படி ஒரு நல்ல இமேஜ் இருக்கிறதோ, அதைப் போலவே சினிமாத் துறையில் அவரின் மகன் உதயநிதிக்கு இமேஜ் இருக்கிறது. எளிமையானவர், பந்தா செய்யாதவர், அதிகாரமிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றாலும் அந்த அதிகாரத்தை

TM CS Karufamily Sept8 revised.qxp 8/31/2010 1:28 PM Page 5



## கலாநிதி மாறன்

**தொடக்கம்:** 1990களில் தொலைக்காட்சித் துறை தனியாருக்கு திறந்துவிடப்பட்டபோது, உருவான சன் நெட்வொர்க்கின் மொத்த பங்குகளின் இன்றைய சந்தை மதிப்பு ரூ.18,307 கோடி என்கிறது மும்பை பங்குச் சந்தை இணையதளம். சன் குழுமத்தின் ஒரு பங்கின் மதிப்பு ரூ. 464

**வெளிவந்த படங்கள்:** *காதலில் விழுந்தேன், திண்டுக்கல் சாரதி, தெனாவெட்டு, அவுட்லேண்டர், படிக்காதவன், தீ, அயன், மாசிலாமணி, நினைத்தாலே இனிக்கும், கண்டேன் காதலை, வேட்டைக்காரன், தீராத விளையாட்டுப் பிள்ளை, சுறா, சிங்கம், தில்லாலங்கடி.*

**அடுத்து** ஷங்கர் இயக்க, ரஜினி- ஐஸ்வர்யா ராய் நடித்த *எந்திரன்* இந்தியாவிலேயே மிகப்பெரிய பட்ஜெட் (ரூ. 150 கோடி) படம்.

### கருணாநிதி குடும்பத்தினர் தயாரிக்கும் படங்களுக்கு உள்ள சாதகமான அம்சம், அவர்களது டிவி சேனல்களில் அப்படங்களுக்குக் கிடைக்கும் அதிகபட்ச விளம்பரங்களும் திரைப்படத் தரவரிசையில் முதலிடமும்தான்.

பிறரிடம் காட்டாதவர் என்றே உதயநிதி அறியப்படுகிறார். தயாரிப்பு, விநியோகத் துறை என்று திரைக்குப் பின்னால் கலக்கி வரும் உதயநிதி இப்போது திரையிலும் தோன்ற விருக்கிறார். நாயகனாகத் தோன்ற இருக்கும் படத்தின் ஷூட்டிங் டிசம்பரில் நடக்கும். “இது ரொமான்டிக் காமெடி. ஒரு புதுமுகத்துக்கு இருக்கும் பதற்றம் தயக்கம் ஆகியவற்றுடன் இருக்கிறேன்” என்கிறார் உதயநிதி. உதயநிதியின் மனைவி கிருத்திகாவும் எதிர்காலத்தில் சினிமாவில் காலடி பதிப்பார் போல் தெரிகிறது. இதுவரை எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர்பான இரண்டு ஆவணப் படங்களை அவர் இயக்கியிருக்கிறார். “மிகவும் சுதந்திரமாக செயல்படுகிறவர் அவர். சொந்தக் காலில் ஏதாவது செய்ய நினைக்கிறார். அவரிடம் உள்ள ஒரு சில கதைகளை நான் கேட்டிருக்கிறேன். எல்லாம் நல்லபடி நடந்தால் அவர் விரைவிலேயே ஒரு இயக்குநராக பரிணமிப்பார்” என்கிறார் உதயநிதி. ஏற்கனவே *இன்பாக்ஸ் 1305* என்ற இதழின் ஆசிரியராக இருக்கிறார் கிருத்திகா.

சினிமாவில் உதயநிதியின் வெற்றியால் இந்தத் துறைக்குள் அடுத்து ஈர்க்கப்பட்டவர்தான் கருணாநிதியின் இன்னொரு பேரனும் மத்திய உரம் மற்றும் ரசாயனங்கள் துறை அமைச்சருமான மு.க. அழகிரியின் மகனுமான துரை தயாநிதி அழகிரி. *வாரணம் ஆயிரம், பையா* ஆகிய இரண்டு பெருவெற்றிப் படங்களை கொடுத்திருக்கிறது அவரின் க்ளவுட் நைன் தயாரிப்பு நிறுவனம். *நான் மகான் அல்ல*, ராம் கோபால் வர்மாவின் *ரத்தச் சரித்திரா* போன்ற அவரின் அடுத்த படங்களும் முக்கியமானவை. ராயல் கேபிள் விஷன் என்ற கேபிள் நிறுவனம் ஒன்றையும் துரை தயாநிதி நடத்துகிறார். கருணாநிதி குடும்பத்திற்கும் மாறன் குடும்பத்திற்கும் இடையே பிளவு ஏற்பட்ட சமயத்தில் இவரின் கேபிள் நெட்வொர்க்கில் சன் குழும சேனல்கள் இருட்டடிப்பு செய்யப்பட்டதாக செய்திகள் வெளியாகின. கருணாநிதி-மாறன் குடும்ப உறவுகள் பிற்பாடு சீரடைந்தாலும் ஜேக் கம்யூனிகேஷன்ஸ் என்ற கேபிள் நிறுவனம் மூலம் சென்னையில் சன் குழுமத்தின் கிளையான சுமங்கலி கேபிள் விஷனுக்கு இவர் சவால் விடுகிறார். துரை தயாநிதிக்கும் நடிக்க ஆசை இருக்கிறது.

இவருக்கு அடுத்து கருணாநிதியின் இன்னொரு பேரனும் தமிழ் சினிமாவில் நுழைந்திருக்கிறார். தனது ‘மோகனா மூவீஸ்’ தயாரிப்பு நிறுவனம் மூலம் தனது மகன் அருள்நிதியை வைத்து *வம்சம்* படத்தைத் தயாரித்திருக்கிறார் கருணாநிதியின் கடைசி மகன் மு.க. தமிழரசு. 1980களில் *கோபுர வாசலிலே, இதயத் தாமரை, நியாயத் தராசு* போன்ற படங்களை வெளியிட்டிருக்கிறார் தமிழரசு. “என் அண்ணன் உதயநிதியால்தான் எனக்கு இந்த வாய்ப்பு கிடைத்தது. சொந்தத் தயாரிப்பில் மட்டுமல்ல மற்றவர்களிலும் நடிக்கத் தயாராக இருக்கிறேன். என் திறமையை நம்பி களம் இறங்கியிருக்கிறேன்” என்கிறார் அருள்நிதி. கருணாநிதி குடும்பத்திலிருந்து சினிமாவில் குதிப்பவர்களின் எண்ணிக்கை முடியவில்லை. கருணாநிதியின் சகோதரி மகன் அமிர்தம் 13 வருடங்களுக்கு முன்பு இரண்டு படங்களைத் தயாரித்து இருக்கிறார். இப்போது கலைஞர் டிவியில் பிரதானப் பொறுப்பு வகிக்கும் அமிர்தத்தின் மகன் குணநிதியும் *முரட்டுக் காளை* என்ற படத்தைத் தயாரித்து வருகிறார்.

கருணாநிதி குடும்பத்திலிருந்து தயாரிப்பு, விநியோகம், நடிப்பு என சினிமாவில் ஏராளமானோர் களமிறங்கி வருவதை நேர்மறையாகப் பார்ப்பவர்களும் உண்டு. “கோலிவுட்டின் சிறந்த திறமையை வெளிக்கொண்டு வருவதற்கான புதிய சிந்தனையும் பணமும் இவர்களிடம் இருக்கிறது” என்கிறார் ஒரு சினிமா விமர்சகர். இவர்களின் வரவால் தமிழ் சினிமாக்களின் கந்து வட்டி சுழலில் சிக்கிக் கொள்ளும் அவலம் குறைந்திருப்பதாக கூறப்படுகிறது. ஒரு குத்துப் பாட்டு, கதையோடு கடுகளவும் தொடர்பில்லாத காமெடி செருகல்கள், ஃபார்முலா திணிப்புகள் போன்றவற்றை இவர்கள் அதிகமாக ஊக்குவிப்பதில்லை என கூறப்படுகிறது. கருணாநிதி குடும்பத்தினரின் வரவு கமர்ஷியல் சினிமாக்களுக்கே பெரிதும் உதவியிருக்கிறது என்றாலும், புது சிந்தனையோடு வருகிறவர்களுக்கும் இது ஒரு வாய்ப்பு தருகிறது. *தமிழ்ப்படம், மதராசபட்டினம்* போன்றவை அதற்கு சில உதாரணங்கள். அதேநேரத்தில் கருணாநிதி ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் சூழலில் அவரது குடும்பத்தினர் மீடியாவின் பல துறைகளில் கால் பதிப்பதால் எழும் ஏகபோகம் நல்லதல்ல என்ற விமர்சனமும் எழுகிறது.

இன்று தமிழகத்திலுள்ள 90 சதவீத திரை அரங்குகள் கலாநிதி அல்லது உதயநிதி அல்

TM CS Karufamily Sept8 revised.qxp 8/31/2010 1:28 PM Page 6



லது துரை தயாநிதியின் கட்டுப்பாட்டில் இருப்பதாக கூறப்படுகிறது. தமிழகத்திலுள்ள 30 சதவீத திரையரங்குகள் சன் குழுமத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாக கூறப்படுகிறது. சென்னை-திருச்சி பகுதிகளில் உள்ள பல திரையரங்குகள் உதயநிதியின் கட்டுப்பாட்டில் இருப்பதாக சொல்லப்படுகிறது. கோயம்புத்தூர்-மதுரை வட்டாரம் துரை தயாநிதியின் ராஜ்ஜியம் என்றும் சொல்லப்படுகிறது. குறிப்பிட்ட காலக் கட்டங்களுக்கு திரையரங்குகள் வாடகைக்கு எடுக்கப்படுகின்றன. அந்தக் காலக் கட்டம் முழுவதும் திரையரங்குகள் அதன் முதலாளிகளுக்கு அல்லாமல் வாடகைக்கு எடுக்கும் இவர்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. இதனால் இந்தக் குடும்பத்திற்கு வெளியே உள்ள ஏராளமான தயாரிப்பாளர்கள் தயாரிக்கும் படங்கள் திரை அரங்குகள் கிடைக்காமல் திண்டாடும் அவல நிலைக்குத் தள்ளப்படுவதாக சொல்லப்படுகின்றன. உதாரணத்திற்கு கருணாநிதி திரைக்கதை எழுதிய *பெண் சிங்கம்* படம் ரிலீஸான போது திரையரங்குகள் கிடைக்காமல் 12 படங்கள் காத்திருக்க வேண்டி வந்ததாகத் தெரிகிறது. "வசூல் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒரு சில படங்களை 20 நாட்கள் வரை ஓட்டுமாறு நிர்பந்திக்கிறார்கள்" என்கிறார் திரையரங்கு உரிமையாளர் ஒருவர். திரையரங்குகள் கிடைப்பதில் உள்ள நெருக்கடியால் 64 திரைப்படங்கள் தயாரான பிறகும் வெளிவர முடியாமல் இருட்டறையில் கிடப்பதாக திரைப்பட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. திரையரங்குகளின் வாடகை என்ற பெயரில் இந்தத் துறையில் ஏற்பட்டு இருக்கும் ஏகபோகமே இதற்குக் காரணம் என்று ஆதங்கப்படுகிறார்கள் திரைத் துறையினர். சினிமா தயாரிப்பையும் கணிசமான திரையரங்குகளையும் ஒரே தரப்பினர் வைத்திருக்கும் போது, அவர்களுக்குப் போக மிச்சமுள்ள திரையரங்குகளை மட்டுமே ஓட்டுமொத்த கோலிவுட்டும் நம்பியிருக்க வேண்டி வருகிறது.

தமிழ்த் திரையுலகம் ஆண்டுதோறும் 150 படங்களைத் தயாரித்தாலும் அதில் 100 அல்லது 120 மட்டுமே திரையரங்குகளை எட்டுவதாக ஃபிக்கி நடத்தியிருக்கும் ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. 2009-10ல் கோலிவுட் ரூ.800 கோடி வருவாயை ஈட்டியிருப்பதாகவும் அதில் 65 சதவீதம் பெரிய பட்ஜெட் படங்களின் மூலம் வந்ததாகவும் அந்த ஆய்வு தெரிவிக்கிறது. ஆனால் 50 சதவீதமாக இருந்த திரைப் படங்கள் ஹிட்டாகும் விகிதம் கடந்த நான்கு ஆண்டுகளில் 15 சதவீதமாக குறைந்துவிட்டது.

ஒரு பக்கம் திரையரங்குகள் மீது ஏகபோகம். மறுபுறம் அரசு அதிகாரத்திற்கு நெருக்கம். இந்த வசதிகளைக் கொண்டு இருக்கும் கருணாநிதி குடும்பத்தினரின் தயாரிப்பில் படங்களை இயக்குவது அனுகூலமான ஒன்றாக இருப்பதாக சொல்கிறார் ஒரு பிரபல இயக்குனர். இதற்கு பல காரணங்கள். அரசியல் பின்னணி இல்லாதவர்கள் தயாரிக்கும் படங்கள் சர்ச்சைகளில் சிக்கினால் அதோகதிதான். ஆனால் கருணாநிதி குடும்பத்தினர் தயாரிக்கும்போது யாருக்கும் வம்பு செய்யத் துணிவு இருக்காது. சர்ச்சை உருவானாலும் முளையிலேயே அதிகாரத்தைக் கொண்டு கிள்ளி எறிய முடியும். அதோடு இந்தக் குடும்பத்தினர் தயாரிக்கும் படங்களை திரையிட்டு இருக்கும் திரையரங்குகள் மீது எந்த கலாச்சார காவலர்களும் வன்முறையை ஏவிவிட முடியாது. இவர்களுக்குச் சொந்தமான சேனல்களில் கிடைக்கும் விளம்பரம் அதையெல்லாம்விட முக்கியமானது. ஆனால் இத்தகைய பின் புலத்தால் பலன் அடைகிற இயக்குனருக்கு நல்லதாகவும் அதனால் பாதிப்படைகிற இயக்குநருக்கு கெட்டதாகவும் தெரிகிற விஷயம் இது.

அவர்களுக்குச் சொந்தமான சேனல்களில் எக்கச்சக்க விளம்பரம் தரப்படுவதால் சுமாரான படத்தைக்கூட ஓட்டி விடலாம் என தெரிய வந்திருப்பது சாதாரண இயக்குநர்களுக்கு பெரு உற்சாகம் தரக்கூடும். உதாரணத்திற்கு தற்போது வெளியாகி இருக்கும் *தில்லாலங்கடி* போன்ற நல்ல கதையம்சம் இல்லாத படத்தைக்கூட அவர்களால் தோல்வியடையாமல் பார்த்துக்கொள்ள முடிகிறது. அதேநேரத்தில் தரமான படத்தை எடுத்தாலும் ஒரு குறிப்பிட்ட சேனலின் திரை விமர்சனத்தில் அது இடம்பெறாமல், அந்த சேனல் தரப்பினர் தயாரிக்கும் படமே நம்பர் ஒன் இடத்தை பிடிப்பது பல இயக்குநர்களுக்கு கடுப்பை தருகிற விஷயம் (பார்க்க: பெட்டிச் செய்தி). ஆனால் இவர்கள் அதிகாரப் பின்னணியில் இருப்பதால் அவர்கள் மீது புகார்கூட சொல்ல முடியாத அவல நிலையில் இருக்கிறோம் என்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு இயக்குநர். உதயநிதி இதை மறுக்கிறார். "*களவாணி, சுப்ரமணிய*





## தயாநிதி அழகிரி

**தொடக்கம்:** கௌதம் மேனன் இயக்கிய *வாரணம் ஆயிரம்* படத்தை இவரது கிளவுட் நைன் நிறுவனம் 2008ல் வெளியிட்டது.

**வெளிவந்த படங்கள்:** இவர் தயாரித்த முதல் படமான *தமிழ்ப்படம்* ஹிட். தமிழ் ஹீரோக்களை கிண்டல் செய்ததற்காக பேசப்பட்டது. கார்த்தி நடித்த *பையா, நான் மகான் அல்ல* படங்களை வெளியிட்டார்.

**அடுத்து** *மங்காத்தா, தூங்கா நகரம்* தயாரிப்பு, *ரத்த சரித்திரம், வா (குவார்ட்டர் கட்டிங்)* வெளியீடு.

TM CS Karufamily Sept8 revised.qxp 8/31/2010 1:28 PM Page 7

எச்.கே. ராஜசேகர்



## உதயநிதி ஸ்டாலின்

**தொடக்கம்:** தரணி இயக்கத்தில் விஜய் நடித்த *குருவி* படத்தை இவரது ரெட் ஜெயன்ட் நிறுவனம் 2008ல் தயாரித்தது.

**வெளிவந்த படங்கள்:** கே.எஸ். ரவிக்குமார் இயக்க, சூர்யா நடித்த *ஆதவனை* தயாரித்தார். கௌதம் மேனன் இயக்கத்தில் சிம்பு நடித்த *விண்ணைத் தாண்டி வருவாயா*, விஜய் இயக்கத்தில் ஆர்யா நடித்த *மதராசப்பட்டினம்* ஆகியவற்றை வெளியிட்டார். *பாஸ் என்கிற பாஸ்கரன்* விரைவில் வெளியாகிறது.

**அடுத்து** கமல் நடிக்கும் *மன்மதன் அம்பு*, சூர்யா நடிக்கும் *ஏழாம் அறிவு* இரண்டும் தயாரிப்பில். *சிவா மனசுல சக்தி* ராஜேஷ் இயக்கத்தில் நாயகனாக அறிமுகமாகிறார்.

*புரம், பசங்க* போன்ற படங்கள் மிகப் பெரிய வெற்றி பெற்றிருக்கின்றன. இவற்றை வெளியிட்டவர்கள் புதிய தயாரிப்பாளர்கள். எந்த பேனரிலிருந்து திரைப்படம் வெளியிடப்படுகிறது என்பது அல்ல, படம் நன்றாக இருந்தால் போதும். பெரிய பேனர், சின்ன பேனர் என்று எதுவாக இருந்தாலும் கடின உழைப்பும் போராட்டமும் எல்லா தயாரிப்பாளர்களுக்கும் பொதுவானது தான்" என்கிறார் அவர். திறமை மட்டுமே கோலிவுட்டில் மதிக்கப்படுவதாகச் சொல்லும் உதயநிதி வெற்றியும் தோல்வியும் எல்லா தயாரிப்பாளர்களுக்கும் ஒன்றுதான் என்கிறார். மக்கள்தான் தீர்ப்பளிக்கிறார்கள். எங்களால் படத்தை ஒட வைக்க முடியாது என்கிறார் அவர்.

ஆனால் இன்று டிவி, டிவி சேனல்களை விநியோகிக்கும் கேபிள் இணைப்பு, டிவி சேனல்களை விநியோகிக்கும் டி.டி.எச் சேவை, நாளிதழ், வார இதழ், எஃப்.எம் சேனல் என ஊடகங்களின் ஆதி முதல் அந்தம் வரை (வெர்ட்டிகல் இன்டக்ரேஷன்) ஒரே குழுமத்தின் கட்டுப்பாட்டில் வந்து இருப்பதை யாராலும் மறுக்க முடியாது. ஊடகத் துறையில் இத்தகைய ஏகபோகம் உருவாகும் போது, உண்மையோ இல்லையோ அவர்கள் சொல்வதுதான் செய்தி என்ற நிலைமை உருவாகிறது. இலங்கையில் போர் உச்சத்திலிருந்த போது இத்தகைய மீடியா ஏகபோகத்தால் பல உண்மைச் செய்திகள் தமிழ் மக்களை சென்றடையவே இல்லை என்று சொல்கிறார் ஊடக நோக்கர் ஒருவர். அத்தகைய செய்திகளை வேறு டிவிக்கள் ஒளிபரப்ப முற்பட்டபோது டிவி சேனல் விநியோகத்திலிருந்த ஏகபோகம் மூலம் அதன் ஒளிபரப்பு மக்களை எட்டாமல் செய்ததாகவும் குற்றச்சாட்டு எழுந்ததை அந்த ஊடக நோக்கர் தனது வலைப்பூவில் பதிவு செய்திருக்கிறார். "அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரிட்டன் போன்ற நாடுகளில் ஏற்கனவே இத்தகைய சட்டங்கள் உள்ளன. ஒரு மீடியாவை முழுமையாக கட்டுப்படுத்தும் ஒரு நிறுவனமோ, தனி நபரோ மற்ற எந்த மீடியாவையும் கட்டுப்படுத்தும் அளவுக்கான பங்குகளை வைத்துக் கொள்ள முடியாது (controlling stake). மக்களுக்கு உண்மையான செய்திகள் சென்று சேர்வதற்கு ஒரு ஜனநாயக தேசத்தில் இத்தகைய சட்டம் மிகவும் அவசியமாகும்" என்கிறார் அவர். இந்திய தொலைத் தொடர்பு கட்டுப்பாட்டு ஆணையம் (ட்ராய்) இத்தகைய ஜனநாயக நோக்கத்துடன்தான் 2008ல் க்ராஸ் மீடியா ஓனர்ஷிப் சட்டம் குறித்த ஆலோசனைகளை பெறத் தொடங்கியது. ஆனால் மீடியா அதிபர்களின் கடும் எதிர்ப்பால் இரண்டு வருடங்கள் ஓடிய பிறகும் அத்தகைய சட்டம் குறித்து எதுவும் செய்ய முடியவில்லை. "இப்போது உள்ள சூழலில் இந்தியாவில் அத்தகைய சட்டம் வரப்போவதே இல்லை. ஏனெனில் அத்தகைய சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட வேண்டியவர்கள்தான் அத்தகைய சட்டத்தை உருவாக்குவதற்கான அதிகார மையத்திலும் இருக்கிறார்கள்" என்கிறார் அந்த தொடர்பியல் வல்லுநர். இந்தியாவில் மீறல்களுக்குப் பிறகே விதிகளை உருவாக்கும் போக்கு தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஊடகங்கள் விவகாரத்தில் விதிமீறல்களின் எண்ணிக்கையும் வீரியமும் மோசமாகிக்

## நடப்பது என்ன?

# டாப் 10 ரகசியம்

**கையில் வைத்திருக்கும் அனைத்து வகை ஊடகங்கள், டாப் 10 போன்று மக்களை கவரும் நிகழ்ச்சிகள் மூலம் திரைப்படங்களுக்கான விளம்பரம் கட்டுப்பாடற்று மாறுகிறது. தமிழ்த் திரையுலகம் வளர்ச்சிப் பாதையில் நடைபோட இவற்றை முறைப் படுத்த வேண்டியது அவசியம்.**

முன்பெல்லாம் திரைப்படத்தை புதிதாக தயாரித்த நிறுவனங்கள் அந்தப் படத்தை விளம்பரப்படுத்த பொது இடங்களில் போஸ்டர் ஒட்டுவார்கள், பத்திரிகைகளில் விளம்பரங்கள் கொடுப்பார்கள். ஆனால் இப்போதும் தமிழ் திரை உலகின் விளம்பர யுக்தி பெருமளவு மாறி இருக்கிறது. இன்றைக்கு டிவி விளம்பரங்கள் தவிர, பிரத்யேக சிறப்பு நிகழ்ச்சிகளை வழங்கி பார்வையாளர்களை கூடுதலாக ஈர்க்க திரைப்படங்கள் முயற்சிக்கின்றன. இன்றைக்கு டிவி நிகழ்ச்சிகளைப் பார்ப்பவர்கள் ஒரு மணி நேரத்தில் குறைந்த பட்சம் 8 முறையாவது புதிய திரைப்படங்களின் விளம்பரத்தை பார்க்க வேண்டி இருக்கிறது. டிவி, நாளிதழ், வார இதழ்களைக் கையில் வைத்திருக்கும் தயாரிப்பு நிறுவனங்களுக்கு இந்த விளம்பர யுக்திகள் வெகுசுலபம். இதைப் பயன்படுத்தி அவை அதீத விளம்பரம் செய்கின்றன. அதை கட்டுப்படுத்த வேண்டிய அமைப்புகளும் அமைதியாக இருப்பதால் இந்தப் போக்கு மிக வேகமாக வளர்கிறது. இந்தப் போக்கினால் பெரிய நட்சத்திரங்கள் நடிக்காத, கதையம்சம் வலுவாக இல்லாத திரைப்படங்களையும் லாபகரமானதாக்கும் சக்தி இந்த புதிய விளம்பர யுக்திக்கு கிடைக்கிறது. புதிதாக வெளியாகும் திரைப்படங்களை தரவரிசைப்படுத்தும் டாப் டென் போன்ற டிவி நிகழ்ச்சிகள் மக்கள் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஆனால் இந்த தரவரிசை நிகழ்ச்சிகள் நடுநிலையாக இருப்பதில்லை என்ற குற்றச்சாட்டு வெகுநாட்களாக இருக்கிறது. தங்களது நிறுவனம் வாங்கும் அல்லது தயாரிக்கும் திரைப்படத்துக்கு இந்த தரவரிசையில் முன்னணி இடங்களைத் தந்து விளம்பரம் தேடிக்கொள்வதும் நடந்து வருகிறது. ஆனால் மினிமம் பட்ஜெட் திரைப்படங்களைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு இது எல்லாமே எட்டாக்கனி. ***பொன் மகாலிங்கம்***

TM CS Karufamily Sept8 revised.qxp 8/31/2010 1:28 PM Page 8



கொண்டே இருந்தாலும் அதைக் கட்டுப்படுத்துவதற்கான விதிகள் உருவாவதற்கான அறிகுறிகள்கூட தென்படவில்லை.

தமிழகத்தின் ஊடகங்கள் மீது கருணாநிதி குடும்பத்தின் பிடி எந்த அளவுக்கு இருக்கமாக இருக்கிறது என்பதை கடந்த வாரம் நாளிதழ் ஒன்றில் வெளியான கேலிச் சித்திரம் விமர்சித்தது. "கலைஞர் கதை வசனத்தில், கலைஞர் தயாரிப்பில், கலைஞர் பேரன் இயக்கத்தில், கலைஞர் பேரன் நடித்த புத்தம் புதிய திரைக் காவியம், கலைஞர் டி.வியில் மிக விரைவில். காணத் தவறாதீர்கள்" என்ற அந்த கார்ட்டூன் தி.மு.க தலைவர் கருணாநிதியை கோபத்தின் உச்சிக்கே தள்ளியது. "கலைஞருக்கு மகன் இருக்கக் கூடாதா, பேரன் இருக்கக் கூடாதா, அவர்கள் சினிமாத் துறையில் ஈடுபடக்கூடாதா? ராஜ் கபூர் குடும்பத்தினர் பலரும் சினிமாவில் இல்லையா?" என்றெல்லாம் கோபமாக அவர் திரைத்துறையினருக்கு நிலம் வழங்குவதற்கான விழாவில் கேள்வி எழுப்பினார். யார் எந்தத் துறையில் செல்வது என்பது அவரவர் தனிப்பட்ட விஷயம் என்பதால் தி.மு.க தலைவர் சொல்வது சரிதான். நீங்கள் சினிமாவுக்கு வரக் கூடாது என்றோ, அரசியலுக்கு வரக்கூடாது என்றோ, தொழில் துறைக்கு வரக்கூடாது என்றோ யாரும் யாருக்கும் தடை விதிக்க முடியாது. ஆனால் சினிமா- அரசு அதிகாரம்-தொழில் இந்த மூன்று துறைகளும் சங்கமிக்கும் இடத்தில் தமிழக முதல்வரின் குடும்பம் இருக்கும் போது சில விமர்சனங்கள் எழுந்து விடுவதை தவிர்க்க முடியாது.

இந்த மூன்று துறைகளும் ஒன்றை ஒன்று பல்வேறு வகைகளில் சார்ந்து இருக்கின்றன. திரைத்துறை சம்பந்தமான பல்வேறு கட்டுப்பாடுகள் அரசாங்கத்திடம் உள்ளன. அதனால் திரைத் துறையினர் அரசுக்கும் அரசு அதிகாரத்திலுள்ள குடும்பத்தினருக்கும் பயந்தே தீர வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள் என்பதால் அத்தகைய குடும்பத்திலிருந்து வருபவர்களின் ஏகபோகம் குறித்து கருத்துகூட சொல்ல முடியவில்லை என திரைத்துறையைச் சேர்ந்த பலர் விமர்சிக்கிறார்கள். ராமனின் அம்பால் குத்தப்பட்ட தேரையின் கதையைப் போல் ஆகிவிட்டது கோலிவுட்டின் கதை.

தங்கள் மீது தொடர்ந்து சுமத்தப்படும் குடும்பக் குற்றச்சாட்டுகளை கருணாநிதியும் தொடர்ந்து உன்னிப்பாக கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார். *வம்சம்* திரைப்படத்தின் வெளியீட்டு விழாவில் அதை வெளிப்படையாகவே பேசினார். *வம்சம்* என்று படத்திற்கு பெயர் வைக்க வேண்டாம் என்ற கோரிக்கையை இயக்குநர் பாண்டிராஜ் ஏற்காததை அதில் குறிப்பிட்டிருக்கிறார். "வம்சம் என்றால் கருணாநிதி வம்சம் என்று குறை சொல்வார்கள் என்று அவரிடம் கூறினேன். ஏற்கனவே குடும்பம் குடும்பம் என்று பேசி வருகிறார்கள்" என்று குறிப்பிட்டுப் பேசினார் அவர். "இவ்வாறு வம்சம் வம்சம் என்று தீர்க்கதரிசியாக காட்சி தரும் கருணாநிதிக்கு தமிழ்த் திரையுலகில் தன் குடும்ப நபர்கள் அல்லது குழுக்களின் ஏகபோகம் எத்தகைய மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதும் தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. இயற்கையின் அம்சமான பன்மைத் தன்மையை ஏகபோகம் சிதைக்கிறது. காலப்போக்கில் இது கற்பனை வளம் குன்றவும் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கும் இட்டுச் செல்லும். அதிலும் குறிப்பாக மக்களுக்கும் நிகழ்வுகளுக்கும் பாலமாக இருக்கும் ஊடகத் துறையில் ஏற்படும் இத்தகைய ஏகபோகம் ஒட்டுமொத்த சமூகத்தின் வளர்ச்சிக்கும் விழிப்புணர்வுக்கும் சாவு மணி அடிக்கும். அதனால்தான் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் க்ராஸ் மீடியா ஓனர்ஷிப் போன்ற சட்டங்கள் இந்தியாவில் கொண்டு வரப்பட வேண்டும் என்கிறார்கள் தொடர்பியல் வல்லுநர்கள்.

எச்.கே. ராஜசேகர்



*வம்சம்* படத்தின் ஆடியோ வெளியீட்டு விழாவில் தாத்தா மு.கருணாநிதியுடன் அருள்நிதி.

**கலைஞருக்கு மகன் இருக்கக்கூடாதா? கலைஞருக்கு பேரன் இருக்கக்கூடாதா? அவர்கள் திரைப்படத் துறையில் ஈடுபடக் கூடாதா? வேறு யாருக்கும் வாரிசுகள் இருந்து, அவர்கள் அந்தந்தத் துறையிலே ஈடுபட்டது கிடையாதா? என்றார் மு. கருணாநிதி.**

பேசுகிறவர்களை துவம்சம் செய்துவிட வேண்டாமா என்று சிலர் கேட்கிறார்கள். துவம்சம் செய்துவிட முடியும்தான். ஆனால் அண்ணா வழியில் அவர்களை நம் வசம் செய்ய வேண்டுமே ஒழிய துவம்சம் செய்யக்கூடாது" என்றும் கூட அவர் பேசினார். அவர் நினைத்தது போலவே இந்தக் கட்டுரையின் துவக்கமும் *வம்சம்* என்ற படத் தலைப்பு கருணாநிதி குடும்பத்தின் வம்ச ஏகபோகத்தைச் சுட்டுகிறது என்ற வர்ணனையுடன் தான் ஆரம்பிக்கிறது.

*எஸ்.செந்தில் குமார்,*
*பொன்.மகாலிங்கம்* உதவியுடன்